Register No. | | | | | | | | |

# FRE

3564–17

(For the candidates admitted from 2009–2010 onwards)

B.A., B.L. DEGREE EXAMINATIONS, MAY 2017.

(Five Years Regular Course)

Third Year — Fifth Semester

LAW OF EVIDENCE

Time : Three hours Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Explain in detail the different kinds of evidence. In which cases evidence need not be produced?

சான்றின் பல்வேறு வகைகளை விரிவாக விவரிக்கவும். எந்தெந்த நேர்வில் சான்றளிக்கத் தேவையில்லை?

https://www.tndaluonline.com

2. 'All confessions are admissions; but not all admissions are confessions' – Explain.

'அனைத்து குற்ற ஏற்புரைகளும் ஒத்தேற்புரைகளே; ஆனால் அனைத்து ஒத்தேற்புரைகளும் குற்ற ஏற்புரைகளாகாது' – விளக்குக.

3. Explain the evidentiary value of character evidence. How it exists in civil and criminal proceedings?

குண இயல்புச் சான்றினை விளக்கவும். அவை உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில் எவ்வாறு செயல்படுகிறது?

4. "The document proved to be thirty years old and produced from proper custody is free from suspicion" – Explain.

"தக்க பாதுகாப்பில் இருந்து தாக்கல் செய்யப்படும் முப்பது வருடப் பழமைவாய்ந்த ஆவணமானது அனைத்து ஐயங்களுக்கும் அப்பாற்பட்டது" – விளக்குக.

5. "Cross examination though very powerful is also a very dangerous weapon" – Explain.

"குறுக்கு விசாரணை என்பது சக்திமிக்கதாயினும் மிகவும் ஆபத்து நிறைந்த ஆயுதம் ஆகும்" – விவரி.



PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each :

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக :

(a) Alibi.

வேற்றிடச்சான்று.

(b) Best Evidence Rule.

சிறந்த சான்று விதி.

(c) Conclusive proof.

முழுமையான மெய்ப்பிப்பு

(d) Dying Declaration.

மரண வாக்குமூலம்.

(e) Electronic document.

மின்னணு ஆவணம்.

(f) Foreign judgement.

வெளிநாட்டுத் தீர்ப்பு

(g) Estoppel and Res judicata.

முரண்தடை மற்றும் முன்தீர்ப்புத் தடை.



https://www.tndaluonline.com

(h) Leading questions.

விடையமை வினாக்கள்.

(i) Patent ambiguity.

வெளிப்படையான பொருள் மயக்கம்.

(j) Improper admission of Evidence.

சான்றுகளைத் தவறுதலாக ஏற்றல்.

PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Dead body resultant of a homicide was found in the house of the accused 'A'. 'A' failed to explain it. What kind of presumption may the court to raise?

மரணம் விளைவிக்கப்பட்டு இறந்துவிட்டவரின் உடல் குற்றஞ்சாட்டப்பட்டவர் A – ன் வீட்டில் காணப்பட்டது. A – வினால் உரிய விளக்கம் கொடுக்க இயலவில்லை. இந்நிலையில் நீதிமன்றம் எவ்விதமான துணிபிடும்?



8. In a case of death in police custody, the accused police officer contended that the deceased was at the time in question somewhere else; which they could not prove. Is these facts relevant in a trial for murder?

ஓர் காவல் நிலைய காவல் வைப்பின் போது ஏற்பட்ட மரணத்திற்கு குற்றம் சாட்டப்பட்ட காவல்துறை அலுவலர் இறந்து விட்டவர் சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் நேர்வில் வேறு இடத்தில் இருந்தார் எனக் கூறினார்கள். ஆனால் அதனை அவர்களால் மெய்ப்பிக்க இயலவில்லை. கொலைக்கான குற்ற விசாரணையில் இவை தொடர்புடை நிகழ்மைகளா?

9. 'A', a lunatic, before dying said that 'B' – stabbed him. Is A's dying declaration admissible?

A என்ற பித்தர் தான் இறப்பதற்கு முன்பாக 'B' என்பவர் தன்னைக் கத்தியால் குத்தியதாகக் கூறினார். A யின் மரண வாக்குமூலம் ஏற்புடையதா?

10. An accused person makes the following statement to the police, "I will show you where I have hidden my share from the bank robbery". Discuss the admissibility of this statement as evidence.

குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் காவல் துறை அலுவலரிடம் "வங்கிக் கொள்ளையில் என்னுடைய பங்கை எங்கு ஒளித்து வைத்திருக்கிறேன் என்பதை உங்களுக்கு காண்பிக்கிறேன்" எனக் கூறினார். இக்கூற்றின் சான்று ஏற்புடைமையை விவாதிக்கவும்.



https://www.tndaluonline.com

11. A, an accused of murder, alleges that by grave and sudden provocation, he was deprived of the power of self-control. On whom the burden of proof lies?

A என்ற கொலைக் குற்றம் சாட்டப்பட்ட நபர் தனக்கு திடீரென ஏற்பட்ட ஆத்திரத்தால் தான் சுயக்கட்டுப்பாட்டை இழந்ததாகக் கூறினார். இதனை மெய்ப்பிக்கும் சுமை யாருடையதாகும்?

12. Marry Anne was charged only for the. murder of her husband by poisoning him. Still evidence of death of her three sons under similar circumstances were produced before the court. Is they are admissible as evidence?

மேரி அன் என்பவர் தனது கணவரை நஞ்சு வைத்துக் கொன்றதாக மட்டுமே குற்றம் சாட்டப்படுகிறார். இருப்பினும் அவருடைய மூன்று மகன்கள் இது போன்ற சூழ்நிலையில் இறந்தார்கள் என்ற நீதிமன்றத்தின் முன் சான்று அளிக்கப்படுகிறது. அவைகள் ஏற்புடைச் சான்றாகுமா?

---



https://www.tndaluonline.com